சகோதரிகளே! இந்தக் கடன்படல் என்னும் விஷயத்தை வாசித்துப்பாருங்கள். தேவைக்கு அவசியமில்லாததை வாங்க நினைக்காதீர்கள். துணிக்காரன் துணி மூட்டையை அவிழ்த்துவிட்டு, "அம்மா நீங்கள் வாங்கவேண்டாம்; பார்த்துவிட்டு விடுங்கள்" என்பான். ஏனெனில் உங்களின் சபல புத்தியை அவன் நன்றாய் அறிவான். ஆதலால் உடனே "எனக்கு நேரமில்லை, தேவையானபோது கூப்பிடுகிறேன்", என்று எரிச்சலோடு சொல்லி அவனை அனுப்பிவிடுங்கள். இப்படியே ஒவ்வொன்றிலும் உங்கள் புத்திமாறுபடும் நேரமெல்லாம். 'இல்லை, நான் வாங்கமாட்டேன்' என்று எரிச்சலோடு உங்களுக்கே சொல்லிக்கொள்ளுங்கள். இனியாவது நாம் சீரடைந்து யாழ்ப்பாணத்தவராகிய நாங்களும், இம்மலாய் நாட்டில் தக்க நிலைபரத்தில் இருக்கிறோமென்பதைக்காட்டி எங்கள் பிற்கால சந்ததியாருக்கு ஒருவழி உண்டாக்கி வைக்க சகோதரிகளே! உதவி புரிவீர்களென நம்பி இருக்கிறோம். ஆனால் இதற்குள்ளும் தங்கள் குடும்பத்தைச் செட்டாகவும், சிக்கனமாகவும் நடத்திவரும் சகோதரிகள் இரண்டொருவர் இல்லாமலில்லை. அவர்களைப் பின்பற்றி நடந்தால், வெட்கமென எண்ணுதீர்கள். அதுவே எங்களுக்குப் பெருமை அளிக்க வல்லது.

* * * * *

தமிழர்களாகிய நாம் தமிழ்க் கல்வியை ஆதரிக்கக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் தம் தாய்ப்பாஷையே கற்பிக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் இவ்வூரில் நாம் வசதியற்றவர்களாயிருக்கிறோம். நம் சகோதரிகள் ஒத்துழைத்தால் ஆகாத காரியமும் உண்டா? அறியாமலா, "ஆவதும் பெண்ணால் அழிவதும் பெண்ணால்" என்று பெரியோர் சொல்லியிருக்கிறார்கள். சகோதரிகளே! இனிமேலாவது "நாம் வீண் டம்பாச்சாரி வாழ்வை விலக்கி விடுவோம்" என்றுகூற முன்வாருங்கள். வாங்கினவற்றை என்ன செய்வது; உபயோகிக்க வேண்டியதே. மற்றப்படி "இனிமேல் இல்லை" என்பதை ஞாபகத்தில் வைத்து ஒரு மூல தனத்தைத் தேடி மற்றவரைப்போல் நம் சமூகத்தினரையும், கை தூக்க முன்வாருங்கள். உங்களால் தான் எல்லாம் ஆகவேண்டியது என்பதை உணர்ச்சியுடன் சிந்தித்துப்பாருங்கள்.

* * * * *

கடைசியில் நம் சகோதரி ஒருவரால் ஒரு தொடர்கதை தொடக்கப்பட்டு இருக்கிறது. சகோதரிகள்வாசித்து இன்புறுவதுடன் அதிலிருக்கும் விசேடங்களை உற்றுணர்வார்களாக.

மாதர் தம்மை அடிமை செய்யும்
மடமையைக் கொழுத்துவோம்.

விவாகம்.

விவாகமென்பது இவ்வுலகின் கண்ணே உற்பவித்த ஆணும் பெண்ணுமாகிய இருவர் ஒருவரோடொருவர் அன்னியோன்னியமாய் வாழ்ந்து இல்லறதர்மம் நடத்தும்பொருட்டு ஏற்படுத்திக் கொள்ளும் ஓர்வித பகிரங்க ஒப்பந்தம்.

இது இகம் பரம் ஆகிய இரண்டிலும் ஏற்படும் இன்பசுகங்களைப்பெறுவதற்கு முதற்காரணமாம். ஆதலாலன்றே, இதற்கு கல்யாணம், மங்களம், மணம், மன்றல், சுபம் என்பனபோன்ற பல சிறந்த காரணப்பெயர்கள் அமைந்திருக்கின்றன.

நம் தேசத்தவர்களில் அநேகர் தமது புத்திர புத்திரிகளுக்கு விவாகச்சடங்கு வெகுசிறப்பாகச் செய்துவைக்க ஆவல்கொள்ளுகிறார்களேயன்றி, அதனாலுண்டாகும் பிற்கால நன்மைகளைப்பற்றியாவது, எதற்காக இல்லறத்தாராக்குகிறோம் என்பதைப்பற்றியாவது, சிந்திக்காதவர்களாய் "ஏதோ நாம் கண்ணிருக்கும் போதே கண்டு களித்திடவேண்டும்; இந்த வரனைக்கை விட்டால் வேறு இப்படிக்கிடைப்பதரிது" என்பன போன்ற காரணங்களால் அவசரப்பட்டு முடித்து விடுகிறார்கள். அத்துடன் என்னகடன் பட்டும் கலியாணத்தை மட்டும் சிறப்பாகச்செய்து போடவேண்டும் என்று ஆசையுறுகிறார்கள்.

விவாகச் சோடிகளைச் சரிவரச்சேர்க்காமல், சடங்கைமட்டும் சிறப்பாய்ச்செய்து விடுவதால் வரும் லாபம் தானென்ன? ஓர் வீடுகட்ட விரும்புகிறவன் அதுநெடுநாள் நிலைத்திருக்கவெண்டி அதனை உறுதியாய்க் கட்டுவதற்கு வேண்டிய ஆயத்தங்களையெல்லாம் முன்னமேசெய்து சகல பொருட்களையும் சித்தமாய் வைத்துக்கொண்டுதான் கட்டிடவேலைக்கு ஆரம்பிக்கிறான்.

அப்படியிருக்க, ஆயுள் பரியந்தம் கூடிவாழ்ந்து வம்சவிருத்தியுடன், இகபர சாதனங்கட்குரிய சகல சுகங்களை அடையும் பொருட்டும், ஒருவர்க்கொருவர் உற்றதுணைவராயிருக்கும் பொருட்டும், பரிசுத்த ஜீவியம்செய்யும் பொருட்டும், கடவுளால் எங்களுக்கு அளிக்கப்பட்ட எங்கள் புத்திர இரத்தினங்களின்விவாக விஷயத்தில் நாம் அசிரத்தையாயிருப்பது நியாய்மாகுமா? ஓர் வண்டியில் மாட்டியிருக்கும் சோடி மாடுகளிலொன்று சரிப்படாவிட்டால், அதை மாற்றிவேறொன்று வாங்கிப் பூட்டிக்கொள்ளலாம். ஆனால் கலியாணமானபின் சதிபதிகளுள் ஒற்றுமை இல்லாவிடின் அவர்களைப்பிரிப்பது சாத்தியமான காரியமா? அப்படிப்பிரித்தாலும் சஞ்சலமே; பிரிக்காமல் விட்டிருப்பதும் சஞ்சலமே; ஆதலால் முன்னமே தீரவிசாரித்து இணை சேர்த்துவைப்பது அத்தியாவசியமல்லவா?

மனிததேகத்தில் பாதி பெண்ணென்றே சாஸ்திரமும் முறை கூறுகின்றது. பெண் பாகமும் ஆண்பாகமும் சரிசமமாய் இருந்துதான் ஒரு பூர்த்தியான மனிதனாகிறான். ஆங்கிலேயரோ பெண்களை இன்னும் உயர்த்தி, சரி பாதியில் நல்ல பக்கம் என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். பெண்களின் குணநடைகளை விரும்பி, பணமென்ற பேச்சே இல்லாமல், தம் மனதிற்குகந்த மனையாளாகத் தேடிக் கொள்ளுகின்றனர்.

ஆனால் எங்கள் சாதியிலோ, விவாகம் செய்து கொள்ளவிரும்பும் ஒவ்வொரு ஆண் மகனும் முதல்கேட்கும் கேள்வி, சீதனம் எவ்வளவு? என்பதே. அதன் பின்தான் படிப்பும், அழகும், குணமும் கவனிக்கப்படுகின்றது. ஒரு குறைபியான படிப்பில்லாத பெண்ணுக்கு ஒரு லக்ஷம் சீதனமென்றால், அவளைக்கட்டிக்கொள்ள யாரும் பின்னிற்க மாட்டார்கள். சீதனத்தினால் பெண்ணின் பெற்றோர் படும் கஷ்டங்களையும், சீதனத்தையேகாத்துக் கடனெடுத்துப்படித்துப் பெருகிவரும் நம் ஆண் மக்களின் சங்கதிகளையும் இன்னொருமுறை எழுதவிரும்புகின்றேன். இப்போ சீதனமென்னும் பேயினால் நல்வாழ்க்கைக்குரிய நற்பெண்ணரைத்தேடாமல், பணத்தினால் செருக்குண்ட நமன்களைப்பெண்ணராய் தேடிக்கொள்ளுகிறார்கள் என்று மட்டும் முடித்து விடுகிறேன். ஆனால் பணத்துடன் குணமும் அமைந்திருந்தால் விசேஷந்தான். அது துர்லபமே.

மேலும் பெற்றோர், முதலில் தங்கள் பிள்ளைகளை மணக்க விருக்கும் ஆண் மக்களின் நன் நடத்தையை ஆராய்ந்தறிந்து கொள்வதுடன், என் சில கேள்விகளையும் கேட்கலாகாது?

அவையாவன :—

(1) உன் சொந்த சம்பாத்தியத்திலால் உன் குடும்பத்தை நிர்வகிக்கும் திறமை உனக்கு உண்டா?

(2) தற்காலத்தில் தகுந்த க்ஷேம நிதிகள் அனேகம் உலகில் இருக்கின்றனவே; அவைகளில் ஒன்றிலேனும் உனக்குக் கிடைப்பதில் பத்தில் ஒரு பங்காவது போட்டு வருகிறாயா?

(3) கடன் ஏதும் எடுக்காமல் உன் விவாகத்தை நடத்துவதற்குப் போதுமான பணம் கையில் வைத்திருக்கிறாயா?

இக்கேள்விகளுக்கு அவன் கொடுக்கும் விடை, தங்கள் குலத்துக்கும் அந்தஸ்துக்கும் ஏற்றதாக இருந்தால் மட்டுமே, விவாகத்திற்கு உடன்பட வேண்டும். கம்பெனிகளில் போட்டு வரும் பணத்தை நாமே சேர்த்துவைக்கக்கூடாதா? என்று சிலர் நினைக்கவும் கூடும். சம்சாரத்திலுள்ள அனேகந் தொல்லைகளினால் அப்படிச் சேர்ப்பது மிகவும் துர்லபம். எதிர்பாராத செலவுகள் பல நேரிடலாம். அன்றியும் நம்காயம் நிச்சயமானதா? பணஞ்சேர்த்துவைக்க ஆரம்பித்த இரண்டொரு வருடங்களுக்குள், இல்லை, மனதங்களுக்குள் காலஞ்சென்று விட்டார்களானால், பின் அப்பெண்களின் கதி என்ன ஆவது? இவைகளை எல்லாம் பெற்றோர் யோசிக்க வேண்டுவது நீதியல்லவா? "சந்ததம் கணவன் மேல் ஓழியாத பக்தி சாந்தம் பொறுமை தயை தானம் நற்புத்தி எந்த வேளையும் உடல் ஆத்மசுத்தி; இல்லாதவள் அவன் கழுத்துக்குக்கத்தி"

என்பதை உணராமல், என்ன இல்லாவிடினும் பணமிருந்தாலே போதும் என விரும்பி, விவாகஞ்செய்யும் நம் ஆண்மக்களின் புத்தியை என்னவென்றுரைப்பது.

"மதியாதார் முற்றம் மதித்தொருக்காற் சென்று
மிதியாமை கோடிபெறும்.
உண்ணீர் உண்ணீரென்றுபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடிபெறும்."

என்றவாறு, தம்மைப் பொருட்படுத்தாதவர்கள் எத்தனைய செல்வவந்தாயினும், அவர் தம் சம்மந்தம் விட்டு நீங்குதல் மிகவும் மேன்மை

"தனக்கெழியது சம்மந்தம்" என்றல்லவா சொல்லியிருக்கிறார்கள் ஆன்றோர். அதுபோல் தனக்கு மேலானவர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணாமல், தன் அந்தஸ்துக்குத் தக்கவரோடே சம்மந்தம் வைத்துகொண்டு வந்தால், உலகில் வீண் மனஸ்தாபம், துன்பம், நிந்தை உண்டாவதற்கு ஏதுவுண்டாகாது.

இதெல்லாவற்றையும் தீர ஆராய்ந்து, பணத்தை மட்டும் விரும்பாமல் தங்கள் அந்தஸ்திற்குத்தக்க விவாகம் செய்துவரின், சமாதானமே எங்கும் நிலவுமல்லவா?

கடன் படல்.

செல்வத்தில் சிறந்து விளங்குவோரைக் குபேரன் என்றழைத்தல், தமிழர்களாகிய நமக்குள் ஓர் வழக்கு. இவ்வழக்கு எங்ஙனம் வரலாயிற்றென்றால் புராணக்கூற்றின்படி, முன்னொரு காலத்திலே அழகாபுரிக்காரசனும் குபேரன் என்பவன், நெடுங்காலமாகத் தவம் புரிந்து அழவில்லாத, சங்கநிதி பதுமநிதி என்று சொல்லப்படுகின்றசெல்வங்களையெல்லாம் சிவபெருமானிடத்தில் பெற்றனனும். அப்படிக்குபேரனே நிகர்த்த தனவந்தர்களேனும், தம் வரவிற்குமிஞ்சிய செலவு செய்யத் தலைப்படுவரேல், கடன் படநேரிடும் என்பதுயாவருமறிந்த உண்மை. கடன் பட்டவர், கடனைத்தீர்க்க வேண்டிய காலவெல்லையில் தீர்க்கவியலாதிருப்பின், அவமானமும் வந்து சேரும். பெருத்த செல்வரையும் சிக்கிரம் தரித்திரராக்கும் சக்தி கடனுக்குண்டு. விவேகிகளாகும் சிலரும் வட்டிக்கணக்கை எழுதிக்கணித்துப்பார்க்கச் சோம்பி, வட்டிப்பணம் மிக அற்பமானதுதானே; இச்சிறியதொகையை நாம் கொடுக்கமாட்டோமோ! என்று அலட்சியஞ்செய்துவிட்டு, பின்னால் முதலையும் வட்டியையும் தீர்க்கவழி தெரியாமல் சஞ்சலமடைந்து நிற்கும் பலரைநாமறிவோம்.

கமத்தொழில், வாணிபம், அரசசேவைமுதலிய வற்றால் பொருள் சம்பாதிப்பவர்களைக்காட்டிலும், வட்டிக்குப்பணம் கொடுப்பவர்கள் அதிகமான பொருளைச் சம்பாதிக்கின்றனர் என்பது, வாசகநேயர்கள் எல்லோரும் அறிந்த விஷயமே. மனிதர் தான் சில காலங்களில் வேலை செய்வார்கள்; மற்றநேரங்களில் ஆறியிருப்பர்; ஆனால் வட்டிக்குக் கொடுக்கப்படும் பணமோ அப்படியன்று. அதற்கு ஒரு போதும் தூக்கமுமில்லை; சோம்பலுமில்லை; சராசரிதினம் முப்பது நாழிகையும் உழைத்துக் கொண்டேயிருக்கும். அப்படியிருந்தும் சிலர், தங்களை மற்றவர்கள் பிரபல்யவான்கள் என்று மதிக்கவேண்டுமென்று விரும்பியும், சிலர் வாணிபம், கமத்தொழில் முதலியன செய்தற்பொருட்டும் கடன் படுகின்றனர். சிலர் மணவினை, பிணவினைகளை பிறர்மதிக்க நடத்த வேண்டு மென்றெண்ணிப்பெருந்திரளான பணத்தை அள்ளி வீசுகின்றனர். வேறு சிலர் தாங்கள் குடியிருக்கிற வீட்டையும், நிலத்தையும் ஈடு வைத்துப் பணமீடுத்து, வேறொரு வளவை அல்லது தோட்டத்தை வாங்குகின்றனர். பின்னர் சிலவருஷங்கள் சென்றபின், கடன் பட்ட தொகை ஆற்றுப் பெருக்கைப்போன்று பெருகிவர கடனைத்தீர்க்கும் வகை தெரியாமல், திகைத்துபின்னல் கடன் பட்டு வாங்கிய காணியையும் கடன் கொடுத்தவன் விற்றுக்கொண்டு போகப்பார்த்து நின்று பிராலாபிக்கின்றனர். என்னே இவர்களின் அறியாமை!

வேறுசிலர் விலையுயர்ந்த ஆடைகள், ஆபரணங்கள் வாங்குதற் பொருட்டும், நவீன முறைகளில் அமைக்கப்பெற்று வரும் மோட்டார்வண்டிகள் வாங்கற்பொருட்டும் செலவு செய்கின்றனர். பெரும் உத்தியோகங்களை வகிக்கும் சிலரும் 'கடன் படல்' என்னும் தீய பழக்கத்தின் அடிமைகளாய் தங்கள் உத்தியோகப் பதவிகளையும் இழந்து துன்புறுகின்றனர். சிலர் கடன் பட்டு, அப்பொருளைக்கொண்டு தரும ஸ்தாபனங்கள் அமைக்க முயல்கின்றனர். பள்ளிக்கூடம் கட்டுவித்தல், கிணறு, குளம் முதலியன தோண்டல் ஆகிய பொது நன்மையான கைங்கரியங்களும் செய்கின்றனர். ஆனால் கடன்கொடுத்தவன், தான் கொடுத்த பொருளைக் கேட்ட விடத்து, கடன் வாங்கியவர் கொடுக்கத்தவறின், அறம் பொருளுடையாளைச் சாருமன்றே! ஆதலினால் இவ்விதமான செய்கையை தருமமென்று எங்ஙனம் சொல்லலாம்; இவை அதர்மமே!

உலகத்திலே இன்னுமொரு வகுப்பினர் இருக்கின்றனர். தாம் மெய்வருந்தி பொருள் சம்பாதிக்கப் பஞ்சிப்பட்டு, மற்றவர்களின் பொருளை சுகித்துக்கொண்டிருக்க எத்தனிக்கின்றனர். மற்றவர்களிடத்தில் போய் இதம்பேசிக் கடன் வாங்கி உண்டு உடுத்து மாற்றான் பொருளைச் சுகித்து விட்டு, பின்பு கடன் கொடுத்தவனை வஞ்சிக்கின்றனர். இங்ஙனம் செய்வோரைக்காட்டிலும், வீட்டை உடைத்துக்கன்னக் கோல் வைப்பவன் இழிந்தவனல்லன் என்பதே எம் துணிபு.

கடன் படுதலால் வரும் தீமைகளைப் பாருங்கள். மானநஷ்டம், தரித்திரம், மனப்பீடை, பழி, பாவம் இவற்றை யெல்லாம் கடன் படுபவன் சம்பாதிக்க நேரிடுகின்றதன்றே! கடன் கொடுத்தவனைக்காணும் போதெல்லாம், அவன் நெஞ்சம் கலங்கும் கலக்கத்தை நாமுணர்வோமா? 'கடன்பட்டவன் அடைபுங்கலக்கத்தை உணர்த்த விரும்பி இராமயணச் செய்யுள் ஒன்றை இங்கு கூறுவோம்.

"விடங்கொண்ட மீனைப்போலும்
வெந்தழன் மெழுகுபோலும்
படங் கொண்ட பாந்தள்வாயில்
பற்றிய தேரைபோலும்
திடங்கொண்ட ராமபாணம்
செருக்களத்துற்றபோது
கடன்கொண்டார் நெஞ்சம் போலக்
கலங்கினனிலங் கைவேந்தன்."

இனிமேல் கடன் படாது தப்புவதற்கு நாம் என்ன விஷயங்களைக் கவனிக்கவேண்டும் என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். சம்பாதித்த பொருளில் ஓர் பாகத்தை மிச்சம் பிடித்துச் சேமநிதிகளில் சேர்த்து வைக்கலாம். நாம் செலவு செய்யும் ஒவ்வொரு பைசாவும் எங்ஙனம் செலவாகின்ற தென்பதை கட்டாயமாகக் கவனிக்கவேண்டும். இனி ஒவ்வொரு பண்டத்தைக் கொள்ளும் பொழுதும், அது நமக்கு மிகவும் இன்றியமையாததா, அல்லவா வென்பதையும் சிந்திக்கவேண்டும். நமக்கு அதிகம் பிரயோசனத்துக்கு இல்லாத பொருளாயிருந்தால், நாமொருபோதும் வாங்கக்கூடாது. இனி ஒரு பண்டத்தைக் கொள்ளும் பொழுது மலிவை மாத்திரம் பார்க்கக் கூடாது; அந்தப்பொருளை நெடுநாளைக்குப் பாவிக்கலாமா அல்லவா என்பதையும் நாம் கவனித்தல் வேண்டும். சிக்கனமாக நாம் வாழவேண்டுமானால், இன்னுமிரண்டு மூன்று விஷயங்கள் எமது கவனத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். எங்கள் வீட்டுச்செலவு யிருந்தாலென்ன; மற்றும் நாங்கள் செலவளிக்கும் எக்

செலவாயிருந்தாலுமென்ன; எல்லாவற்றையும் ஒரு குறிப்புப் புத்தகத்தில் குறித்து வைத்திருந்து, நமது வரும்படிகளையும் அவ்விதமே கணக்கிட்டுப்பார்த்தால், செலவு, வருவாயைவிட மேலதிகமாக விருக்கிறதா என்பதை நாமறியக் கூடும். ஒவ்வொருவரும் வரவு செலவுக் கணக்கு வைத்துக் கொள்வதனால், தமது கணக்குஎப்படியிருக்கிறதென்று நன்றாய் விளங்கும். கணக்குப் புஸ்தகத்தை திறந்து கண்முன் வைத்துக் கொள்வதைவிட வேறு ஒன்றும் மனிதனைச் சரிப்படுத்தாது என்று ஒரு பெரியார் கூறுகிறார்.

"கடன் படல்" என்ற விஷயத்தைப் பற்றி அநேகம் சொல்லலாம். ஆனால் விரிக்கிற் பெருகுமென்றஞ்சி இவ்வளவில் முடிக்கலாமேனும். இன்னுமொரு முறை வாசகநேயர்களை நாம் தாழ்மையாக வேண்டுவது என்னவென்றால், கூடிய வரையில் கடன் படாமல் சீவியம் நடத்த நாம் முயலவேண்டும். அத்துடன் ஆடம்பரமான வாழ்க்கையை நாம் ஒழிக்கவேண்டும். இதுவே எனது பிரார்த்தனையும், வேண்டுகோளுமாகும்.

எனது அறியாமை.

மணியோ இரண்டாகி, மூன்றுமாகி விட்டது. எனது அன்பார்ந்த தோழிகளைக் காணவில்லையே; மணி இரண்டடித்ததும் வந்து விடுவார்களே! ஏது காரணம் பற்றியோ இது காறும் வரவில்லை. நான் விரும்பிய சேலையின் விலையைவிசாரித்துவருவதாகச் சொன்னசகோதரியையுங்காணவில்லை; இன்னுமொரு சகோதரியிடம் கடைக்குப் போனால் அதற்கு ஏற்றதாக இறவிக்கைத் துணி வேண்டிக் கொண்டு வரும்படி சொன்னேன்; அவளையும் காணவில்லையே; அவர்கள் வந்தால் சிறிது நேரம் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருக்கலாமே. முன் ஒரு நாள் எல்லோருமாக என்னை எவ்வளவோ மேன்மையாகபுகழ்ந்தார்கள். அப்போ எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருந்தது! ஆனால் அவர்கள் சொன்னதும் உண்மையே. நானும் இவ்வூருக்கு வந்து சுமார் 15 வருஷமாகிறது. அன்று தொடக்கம் இன்று வரையும் எத்தனையோ சகோதரிகள், என்னைப்பார்த்து உடைகடைகளைப் பழகிக்கொண்டார்கள். அது எனக்குப்பெருமைதான். இருந்தாலும் என்னைப்போல் அவர்கள்நடப்பதையும், பிள்ளைகளைச் சிங்காரிப்பதையுமபார்த்து நான் சகியேன். அதனால் மனஸ்தாபமிருந்தாலும வெளியில் காட்டாமல் சிநேகமாகவே நடந்துவருகிறேன். எப்படி இருந்தாலும் அவர்களை ஒருநாள் காணவிட்டால் ஒரு யுகமாக இருக்கிறது. நானுவது போய்ப் பார்த்துவரலாமென்றால், சோறு கொண்டுபோன முத்து இன்னும் வரவில்லை. முனியம்மாவோடு பிள்ளைகளை விட்டுப் போகவும மனம்வருகிறதில்லை. நானில்லாவிட்டால் விளையாட்டுப்போக்கில் பிள்ளைகளைக் கவனிக்கமாட்டாள். அவளும் சிறுபிள்ளைதானே? "இப்படிப்பல போசனைகளோடும் இருக்கும் பொழுது" எனது கணவரின் ஆப்த நண்பரின் மனைவி வந்தாள். அவளிடம் விசாரித்தால தெரியுமென எண்ணினேன். ஆனால் அவளின் தர்க்கங்கள் எனக்குப் பிடிக்காது. எனினும் தாராக்கவலையுடன் தலையசைக்கவேண்டியதே, எனத் தீர்மானித்துக் கொண்டு, வந்தவர்களை

வாருங்கள், உட்காருங்கள் என்றேன்.

சி. ம: என்ன அம்மா யோசனையோடு இருக்கிறாய்? ஏது இன்று உனது தோழிகளைக்காணவில்லை? உன்னைத தனிமையில காண சந்தர்ப்பம் கிடைத்ததைவிட்டு சந்தோஷம்.

நான்: அதைப்பற்றித்தான் உங்களிடம் கேட்பதற்கு எண்ணினேன். மணி இரண்டிற் கெல்லாம் வந்து விடுவார்கள். இன்று இன்னும் வரவில்லை. ஆனதால் தான் யோசனையோடிருந்தேன்.

சி. ம: ஒருசமயம் இன்னுமொரு சிநேகிதியின் வீட்டுக்குப் போயிருப்பார்கள், அதற்காகவா இவ்வளவு யோசனை?

நான்: அப்படி ஒன்றுமில்லைப் பாருங்கள்; நேரம்போகிறதில்லை; அவர்கள் வந்தால் பொழுது போவது தெரியாமல் பேசிக்கொண்டிருந்து விட்டுப் போவார்கள்.

சி. ம: அதில் என்ன சுகமிருக்கிறது? பொழுது போக்குக்காக வீட்டுவேலைகளைப் போட்டு விட்டு கதைப்பார்களா? காலம் மிகவும் விலையேறப்பெற்றது. உனக்குத்தான் சடவுள் தேடற்கரிய திரவியங்களைத்தந்திருக்கிறாரே; அவர்களோடு விளையாடிக் கொண்டுமே அவர்களுக்கு வேண்டிய தையல், பின்னல், படிப்பு முதலியவைகளைக் கற்றுக்கொடுப்பதிலும், அவர்களுக்குவேண்டிய சட்டைகள் முதலிய வற்றைத்தைப்பதிலும்நல்ல பத்

திரிகைகளை வாசிப்பதிலும், பொழுதைப் போக்க லாமே? இப்போ 'யாழ்பாணத்தவர் ஐக்கிய நாண யசங்கத்தார், 'வழி காட்டி' என்னும சஞ்சிகை வெளியிட்டு வருகிறார்களே; அதில் முன்னேற்றத் திற் குரிய கட்டுரைகள் வெளிவந்திருப்பதை நீ வாசிக்க வில்லையா? அதில் வெளிவந்திருக்கும் 'மாமியின் புத்திமதி' பெண்களுக்கு பொக்கிஷம் போன்றது. என்? உனது கணவரும் அதில் அங் கத்தவராயிருப்பாரென்று நினைக்கிறேன். அப்படி யாயில் உங்களுக்கும் ஒருபிரதி அனுப்பி இருப பார்களே?

நான்: "அது வந்து ஒரு கிரமமாகிறது; பாருங்கள், வாசிக்க நேரமில்லை. ஏதும் நல்ல நாவல்கள் என்றால் வாசித்துப் பார்ப்பேன். பத்திரிகைகள், சரித்திரங்கள் என் ற ல் தொடவும் மாட்டேன். எனது கணவரோ என்றால் அதேவேலையாக இருப்பார். என்னையும் படிக்குப்படி கட்டாயப்படுத்துவார். ஏதோ வொரு நொண்டிச் சமாதானமாவது சொல்லித் தப்பிவிடுவேன்.

சி. ம: நான் சொல்லுகிறேன் என்று வருத்தப்படாதே அம்மா! பத்திரிகைகள், சரித்திரங் கள், இன்னும் பல நூல்களையுப் படித்தால்தான் முன்னேறவழியுண்டு. உண்பதிலும், உறங்கு வதிலும் காலத்தைக் கழித்தால் போம் வழி யென்ன? தீட்டத்தீட்டத்தான் புத்தி கூர்மையா கும்; பெரியோர்களுடைய சரித்திரங்களை வாசிக் கும் பொழுது எவ்வளவு ஆனந்தமாக இருக்கிற தது! அவற்றையும் நமது தாய்ப்பாஷையில் வாசி க்கும் பொழுது அதன் இனிமை சொல்லுந்தரத் தன்று. பிள்ளைகளுக்கு தாய்பபாஷையை மூக் கியமாய் கற்பிக்க வேண்டும். ஆரம்பக்கல்வி தாய் பாஷையில் கற்றால், தொழிற் கல்வியிலும் விசேஷ தேர்ச்சிஉண்டாகும். கதையோடுமறந்துவிட்டேன். பத்திரிகை படிக்க நேரமில்லை என்று சொன்னை யே; காலையில் எழுந்ததும் உனது நித்திய கடன் களை முடித்துக்கொண்டு பிள்ளைகளுக்கு ஆகவே ண்டியதைச் செய்து பள்ளிக்கூடம் அனுப்பி விட் டதும், உனக்கு என்ன வேலையிருக்கிறது? சமை யலுக்கு முத்து இருக்கிறான்; பிள்ளைகளைப்பார் க்க முனியம்மா இருக்கிறாள்; உனக்கு சும்மாவிரு க்க எப்படிப்பொழுது போகும்?

நான்: [இன்று என்னை எழுதில் என் நேநெகிதி விடாள்போலிருக்கிறது; எப்போ மணி நாலரை ஆகும் என்று எண்ணியபடி] பிள்ளைகள் பள்ளிக்கூடம் போனதும், எங்கள் சாப்பாடு மாய்விடும். என்கணவர் ஆபீசுக்குப் புறப்பட்ட தும், முனியம்மாவோடு சின்னப்பிள்ளைகளை விட்டு விட்டு, மரத்தின் கீழ்சிறிது நேரம் நின்று விட்டு வாலாமென்று போவேன். அவ்விடத்தில் மூன்று, மூன்று சிநேகிதிகளும் இருப்பார்கள். அவர் களோடு நானும் உட்கார்ந்தேன் என்றால், நேரம் போவதும் தெரியவராது. மணியும் பதினெ ன்று ஆகிவிடும். அதன் பின்னால் எழுந்து அடுக் களைக்குப்போய் கறி காய்களைத்திருத்தி பக்குவப் படுத்தி சமையற்காரனிடம் கொடுத்து விட்டு வந் தால் சமையல் ஆகிவிடும். முனியம்மா பிள்ளை களின் தேவைகளைக் கவனிப்பாள். நான் குறித்து விட்டுவர, எல்லாம் ஆபத்தமாக இருக்கும். பிள் ளைகளுக்கும் பரிமாறி, நானும் சாப்பாட்டை முடி த்துக்கொண்டு சிறிது நேரம் சாய்வு நாற்காலி யில் களைபாறுவேன். மணி இரண்டானதும் எனது சிநேகிதிகளும் வந்து விடுவார் கள்; மணி நாலு ஆனதும் அவர்கள் தம் தம் வீட்டுக்குப்போய் விடுவார்கள். வீட்டுக்காரரும் வந்து விடுவார். தேனீர் பருகிபானதும் ஏதோ வொரு பத்திரிகை அல்லது புஸ்தகம் வாசிக்க தொடங்கி விடுவார். அது முடிந்ததும் அன்று நடந்த சம்பாஷணைகளைச் சொல்லிமகிழ்வேன். இதுவே எனது நித்திய வேலைகள்.

சி. ம.:- ஐயோ அம்மா! இப்படியாகவா உனது காலம் வீண்போகிறது. நீயோ படித்த பெண். 'சீனியர்' பாசாகியிருக்கிறாய். உனது கண வரோ படித்த மேதாவி. இருவரும் கூடி ஒத்து மைத்தால் சமூகத்திற்குச் சிறந்த தொண்டாயிரு க்குமே? பார் அம்மா! நமது தாய் நாட்டில் குடு ம்பத்தலைவிகளே இப்பொழுது தேசத்தலைவிக ளாய் இருக்கிறார்கள். பெண்களின் ஊக்கத்தால் தான் ஆண்களுடைய தொண்டு தளைத்தோங் கு கிறது. "அவப்பொழுதிலும் தவப்பொழுது நன்று," என்று பெரியோர்கள் செல்லியிருக்கிறார் கள். ஏதோ நானும் பொழுது போக்கிற்கு அலட்டி விட்டேன் என்று நினையாமல், மனதில் ஊன்றி யோசித்துப்பார். பெண்கள் என்னேரமும் கூடி வீண் கதைகள் கதைப்பதால் சிலவேளை களில் சண்டை சச்சரவும் வருவதுண்டு. அதனால் வீண் சேலவுகளும், மனஸ்தாபங்களும் உண் டாகும். 'விறன் மந்திரிமதியும்' என்றபடி உன் கணவனுக்குத் தேவையான பொழுது ஏற்றயோச னைகளைச்சொல்லி உற்சாகப்படுத்த வேண்டிய நீ, வீண் கதைகளை அவர்கள் காதில் போடலாமா? நேநெகிதைகளோடு கூடி பேச வேண்டாமென்று சொல்லவில்லை. அவர்களைச் சந்திக்கிற நேரங்க

ளில் முன்னேற்றத்திற்குரிய முறைகளைக் கலந்து பேசி அதன்படி நட. அவர்களையும் நடக்கும்படி தூண்டு. உனக்குத் தெரிந்த வற்றை அவர்களுக்கும் கற்றுக்கொடு. இல்லறத்தை சீராகவும் சிக்கனமாகவும் நடத்துவதே சிறந்த தொண்டு.

நான்: (எனக்கோ தூக்கம் தொண்டையை அடைக்கிறது; வெட்கத்தால் தலை தாழ்ந்து விட்டது, சினேகிதை என்னுல் இப்படி அலைவா இருக்கவேண்டும் என்று எண்ணியபடி) ஓம்! பாருங்கள், இனிமேல் நீங்கள் சொல்லியபடி நடக்கிறேன். இவ்வளவு காலமும் கண்ணிருந்தும் குருடாயிருந்துவிட்டேன். ஓய்வான நேரத்தில் இப்பக்கம் வந்து போங்கள். நேரம் போனதும் தெரியவில்லை; மணியும் நாலரை ஆகிவிட்டது.

சி. ம: இப்பொழுது நீ பேசுவதைக் கேட்கச் சந்தோஷமாக இருக்கிறது; 'வழிகாட்டியை' அவசியம் வாசித்து அதன்படி நட. "மாமியின் புத்திமதி" யின்படி சமையலறையை நிற்பாட்டி விட்டு நீயே செய்யப்பார். அந்தச்சம்பளத்தை மீதப்படுத்தினுல் பிற்காலத்தில் உனது பிள்ளைகளுக்கு உதவியாக இருக்கும். ஐக்கிய நாணய சங்கத்தில் 10 வெள்ளி கூடக்கட்டிவா; உனக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. ஓய்வான நேரத்தில் வந்து போகிறேன். போய்வருகிறேன், வந்தனம்!

நான் :- மனமார்ந்த வந்தனம்! போய்வாருங்கள்!!

(தொடரும்)

கமலாவதி.

காட்டுச் சேலையால் வீட்டவர் பினைக்கு.

வெற்றிலைத்தட்டுடன் விருந்தையில் வந்து எனது சினேகிதிகளின் வரவை எதிர்பார்த்தபடி உட்கார்ந்தேன். பகல் இரண்டுமணி; வெய்யிலோ அமோகம். வெளியில் கண் முழித்துப்பார்க்க முடியவில்லை. சூரியனின் கடுங்கோபத்துடன் தன்னுலானபட்டும் செடி கொடிகளின் மேலும், பறவைப்பட்சிகளின் மேலும் தனது தீட்சண்ணியத்தைக்காட்டிவருகிறுன். பறவைகளெல்லாம் வெளிக்கிளம்பப்பயந்து தங்கும் கூடுகளிலும், மரநிழல்களிலும் அசைவற்றிருக்கின்றன. வெளியில் ஜன நடமாட்டமே இல்லை.

உத்தியோகள் தரும் பகற் போஜனம் முடித்துக்கொண்டு மறுபடியும் தங்கள் தொழிலுக்குச் சென்றுவிட்டார்கள். வீட்டுக்கு வராமல் இருப்பவர்களுக்கும் வேலையாட்கள் சாப்பாடு கொண்டு போய் விட்டார்கள். மழையானல் பட்டுப் எங்கள் வீட்டு விருந்தை சற்று அசௌகரியமாயிருக்கும். மற்றப்படி என்ன அமோக வெய்யிலானலும் எங்கள் விருந்தை மட்டும் அசௌகரியமாயிருக்காது. இங்கேவந்து உட்கார்ந்தீர்களானல் உங்களுக்கும் வெய்யில் அமோகம் என்றுமே அவ்வளவாகத் தோற்றுது.

நாங்கள் இருக்கும் பக்கத்தில் சேர்ந்தாப்போல் பத்து வீடுகள் உண்டு. அதில் நாலுவீடுகள் பிறசாதியார் குடியிருக்கிறது நீங்கலாக, மற்ற வீடுகளில் எம் சாதியினரே குடியிருக்கிறார்கள். இருவருக்குமட்டும் கைக்குழந்தைகளுண்டு; ஆனதால் என் வீட்டிற்கு வரச்சிறிது தாமதமாகும். மற்ற மூவரும் மணி இரண்டு அடித்ததும் என் வீடுவந்து சேர்ந்துவிடுவார்கள். கையில் ஏதாவது தையல் வேலையும் கொண்டு வருவார்கள்.

இன்று என் சினேகிதி அமிர்தவல்லி, ஒரு சட்டையுடன் வந்து உட்கார்ந்தாள். அதைப் பார்க்க மிகவும் அழகாயிருந்தது. நிறம் வெள்ளைதான்; ஆனல் அதில்நெய்யப்பட்டிருக்கும் சரிகை வேலையோ மிகவும் நேர்த்தியாயிருந்தது. அது என்ன விலை என்று நான்கேட்க வாய்திறப்பதற்குள் சரஸ்வதி சம்பாஷிக்கத் தொடங்கிவிட்டபடியால் நான் பேசாமல் கேட்டுக்கொண்டிருந்தேன்.

சரஸ்வதி: என்ன அமிர்தம் மெஷினில் தைக்காமல் இந்தப் பட்டை, கையால் கைக்கிருயே! இதன விலையென்ன?

அமிர்தம்: மெஷினில்தான் தைத்தேன். கைக்கும் கழுத்துக்கும் துண்டுபொருத்தித்தைத்துவிட்டு பின் திருப்பிமடித்துக்கையால் தைத்தால்தான அழகாயிருக்கும். இது ஒரு யார் விலை ஐந்து வெள்ளி. நான் ஒரு சட்டைக்கு அளவாக முக்கால் யார் தான் வாங்கினேன். அப்போ மூன்றே முக்கால் வெள்ளிதான் ஆச்சுது.

சரஸ்வதி: முக்கால் யாரா? எங்கள் வீட்டுக்காறர் கடைக்குப்போனால் ஒரு யாருக்குக் குறைந்தால் வாங்க மாட்டேனென்று விடுவார். அதற்காக ஒவ்வொரு முறையும் ஒருயார் வாங்கி விணாக ஒவ்வொரு தூண்டு வைத்திருக்கிறேன்.

அமிர்தம்: விலை குறைந்த துணியானாலும் காரியமில்லை. இப்படியான துணியானால் வீணாக்கால்யார் ஏன் எறியவேண்டும். கடைக்காரரைக் கேட்டால் கால்யார் கூடவெட்டிக் கொடுப்பார்களே. தங்கள் காசைக்கொடுத்து வாங்கும் பொழுது இதில் என்ன வெட்கம்?

சரஸ்வதி: ஓம், அது மெய்தான்! இனி மேல் நானும் எங்கள் வீட்டுக்காரரிடம் சொல்லி அப்படித்தான் வாங்குவிக்கவேண்டும். நீ இப்போ அவசரமாகத் தைக்கிறாயே; எப்போ போகப்போகிறாய்?

அமிர்தம்: என் நாத்தனாக்கடித்த தினம் எங்கள் சிநேகிதியின் வீட்டில் கல்யாணம; உனக்குத்தெரியாதோ? நீ வரவில்லையோ? என்று சொல்லிவிட்டு "என்னையும் திருப்பிப்பார்த்து நீங்கள் விரவில்லையோ" என்று கேட்டாள்.

நான்: போகத்தான்வேண்டும். என் தேகம் சுன்னியமையில் இல்லாததால் நித்திரை முழித்தால் மறுபடியும ஏதும் சுவீனமேற்பட்டக்கூடும். இருந்தும் என்ன செய்வது; வேண்டியவர்களாயிற்றே! எங்கள் விவாக வைபவங்களை அநேகமாக இரவில்தான் வைத்துக்கொள்ளுகிறார்கள். அது எவ்வளவு சங்கடமாயிருக்கிறது.

அமிர்தம்: அது உண்மைதான்; ஆனால் எவ்வளவு அசௌகரியமானாலும் இராவில் நடப்பதுதான் பார்வைக்கு எவ்வளவோ அழகாயிருக்கும். சில நாட்களுக்கு முன, பகலில் நடந்த விவாக மொன்றுக்குப் போயிருந்தோம். அவர்கள் எவ்வளவோ செலவுசெய்து மிகவும் ஆடம்பரமாக நடத்திய போதிலும் ஒன்றும் அவ்வளவாக சோபிக்கவில்லை. காரணம் எங்கள் துணி மணிகள் விளக்கு வெளிச்சத்தில் தான் பள பளப்பாயிருக்கும்.

நான்: என்ன, பெண்ணின் துணியா அல்லது போனவர்களின் துணியா ஜொலிக்கவில்லையென்கிறாய்?

அமிர்தம்: மணப்பெண்ணின் துணிதான் முதலில்நல்லாயிருக்கவேண்டும். அத்துடன் மற்றப் பெண்களின் துணிகளும் அதற்கேற்றப்போல் இருந்தால்தான் பார்க்க அழகாகவும் சிறப்பாகவும் இருக்கும். இந்தக்கல்யாண வீட்டுக்கென்று நான் கூட ஒரு காட்டுச்சேலை வாங்கிவைத்திருக்கிறேன். அதற்குச் சோடியாகத்தான் இந்தச் சட்டையையும் தைக்கிறேன் என்றாள். இதை கேட்டதும் நாங்கள் மூவரும் ஆச்சரியத்துடன் "என்ன? காட்டுச்சேலையா?" என்று ஒருமித்துக்கேட்டோம். ஓம் காட்டுச்சேலைதான். காசிப் பட்டுச்சேலைகளிலுள்ள பூக்களைப்போல் அதில் கொடிகள் செடிகள் மாதிரி உடலெல்லாம் வேலை செய்திருக்கும் என்றாள்.

நாங்கள்: ஓ! அதுவா! கொடிப்பூச்சேலை யென்று சொல்லக்கூடாதா? காட்டுச்சேலை என்றேன் சொல்லவேண்டும்.

அமிர்தம்: அதை ஆங்கிலத்தில் (Jungle Saree) என்று சொல்லுகிறார்கள். உங்களுக்குத்தான் ஆங்கிலம் விளங்காதே! அதற்காகத்தான் அதைத்தமிழ்ப்படுத்திக் காட்டுச்சேலை என்று சொன்னேன். (நாங்கள் யாவரும் வயிறு நோகச் சிரித்தோம்).

இவ்வளவும் ஒன்றும் பேசாமலிருந்த என் மற்றொரு சிநேகிதி தங்கம்மா! இந்தக்காட்டுச் சேலையால் தான் எங்கள் வீட்டில் இன்றுயாவரும் பட்டினி என்றாள்.

நாங்கள்: "என் காட்டுச்சேலையால் பட்டினி இருக்கவேண்டும்?" என்று ஆவலாகக் கேட்டோம்.

தங்கா: அதைச் சொல்லாமலிருக்கலாமென்று தான் பார்த்தேன். ஆனால் இங்கும் அந்தக் கதைபே வந்து விட்டபடியால் நானும் வாயைத்திறந்து விட்டேன். நீங்கள் இதை யாருக்கும் சொல்ல மாட்டீர்களே? பின் என்பர்த்தாவின் காதில் விழுந்தால் பெரும் பழியாய் முடியும். (இல்லை இல்லை நாங்கள் ஒன்றுமே வெளி விடமாட்டோம் யென்றதும் அவள் பின் வருமாறு கூறலானாள்) "நான் போன கிழமை ஒரு கல்யாண வீட்டுக்குப் போயிருந்தேனா. அங்கு யாவரும் அந்தக் காட்டுச்சேலையையே அணிந்திருந்தார்கள். உங்களில் குறைந்த சம்பளம் பெறுபவரின் மனைவி கூட அழகான சேலை அணிந்திக்கிறாளே; எனக்கு அம்மாதிரி ஒரு சேலை வாங்கிக்கொடுங்களேன். இப்படிக்கொத்த கல்யாண வீட்டுக்காவது கட்டலாமே என்றேன் எனது கணவரைப்பார்த்து." அதற்கென் பர்த்தா, "இந்த மாசம் கையில் காசேயில்லை; ஊருக்கனுப்ப வேண்டும்; போன

வில்லா வித்தை வித்தையன்றே! பிறதேசத்திலு ள்ளவர்கள் இம் மலாய் நாட்டில் எவ்வளவு அரிய பெரிய காரியங்களைச்செய்து, தங்கள் தங்கள் சாதி யார் பிழைத்து முன்னேற்றமடையும் வழியைக் காண்பித்து வருகிறார்கள். எங்கள் நாட்டார், நம் நாட்டிலுள்ளவர்கள் பிற்காலத்தில் இம் மலாய் நாட்டில் பிழைக்கும்படி என்ன முயற்சிகளைச்செ ய்திருக்கிறார்களென்பதைப்பற்றி ஆலோசிக்காமல், தன்தன் சொந்தக்காரியங்களையே கவனித்து வரு வார்களானால், நமது பிள்ளைகள்கதி எவ்வாறாகு மோ? "செந்தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால் எய்தவருமோ இருநிதியம்." நம் சாகியத்தார் தம்முடைய வினையைத் தாம் நோவ தன்றி, வேறொருவரை நோதல் புத்தியல்ல. பிற சாதியாரைப்பற்றி யோசிக்கும்பொழுது, கைத் தொழிற்சாலைகளும், வர்த்தக சமுதாய முயற்சி களும், வங்கிச்சாலைகளும் இன்னும் இவைபோன் றபல தொழில்களையும் ஏற்படுத்தித் தங்கள் சாதி யாரைச் சொற்ப சம்பளத்துடன் வேலையில் அம ர்த்தி, அவர்கள் முன்னேற்றத்திற்காக அதிக பிர யாசையெடுக்கின்றனர். அவர்கள் பிரயாசைப்படு வதுபோல, நம் சாகியத்தாரும் நமது நாட்டுச் சனங்களின் முன்னேற்றத்திற்காக பிரயாசைப் பட்டு, இத்தகைய ஒழுங்குகளைச் செய்வார்களா னால் எங்களுடைய வேதனைகளெல்லாம் மின்னல் மின்னி மறைவதுபோல் மறைந்துவிடும். நாமும் நன்மை செய்கிறவர்களாயிருப்போம்.

ஓர் தமிழ் சகோதரி.

"தமிழ்"

[A.M. துரைசாமி, தைப்பின்.]

"ஆதியிற் றமிழ்நூ லகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனை வழுத்துதும்
போத மெஞ்ஞான நலம்பெறற் பொருட்டே"
(சேனாவரையார்.)

இவ்வுலகின்கண் பல மொழிகள் வழங்கப் பெறுகின்றன. அவற்றுள் தமிழ் ஒலி வடிவு, வரி வடிவு இரண்டினையும் பெற்ற மிகப் பழைய மொழிகளிலொன்று. 'தமிழ்' என்னும் சொற்கு இரண்டு பொருள்கள் உண்டு. அவை 'இனிமை,' 'தனிமை' என்பன. சிந்தாமணியில் "தமிழ் தழி யிய சாயலார்" என்பதற்கு "இனிமைய தழுவிய சாயலை உடையவர் என்று உரையாசிரியர் கூறி யுள்ளார். மற்றொரு மொழியினின்று தோன் றித் தமிழ்த்தாய், தனித்தியங்கும் வலிமைபுடைய ளாதலால், தனிமை யென்னும் பொருள் உண்டா யிற்று. தமிழ் மொழியின் வரலாற்றைக் கூற இரு புராணக் கதைகள் உள.

(1) அகத்திய முனிவர், வடமொழி வாண ரோடு மாறுபட்டு, அம்மொழிக்கு இணையான வேறொன்றினைக் கொடுக்குமாறு முருகக் கடவுளை வேண்ட, அக்கடவுள் ஓர் இடத்தைக் காட்டி அங் கிருப்பதை எடுத்துச் செல் எனலும், முனிவர் அவ்வோலைச் சுவடிகளை எடுத்துக்கொண்டு தமிழ்! தமிழ்!! எனக் கூவிக்கொண்டு வெளியே சென்றார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

(2) சிவபெருமான் உமா தேவியாரை மணம் செய்தகாலத்து, முனிவர் அனைவரும் திர ண்டு இமயமலையை அடைந்தனர். வடதிசை, பாரமிகுதியாற்றாழ்தலும், தென்திசை கனமின் மையால் மேலெழுந்தது. இதையறிந்த சிவ பெருமான் அகத்தியரை பொதியமலைக்குச் செ ன்று அங்கு தங்கும்படி கட்டளையிட்டனர். முனி வர் தமிழ் சிறந்து விளங்கும் அத்திசையில் எப் பதி வாழ்தல் எனலும், சிவபெருமான் அம்மொ ழியை முனிவருக்குப் போதித்தார் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

"நின்றவனே வந்தனெடியோ னடி பணிந்தான்
அன்றவனு மன்போடு தழீஇய யழுத கண்ணன்
நன்னுரை செயென்று பலநல்லுரை பகர்ந்தான்
என்றுமுளதென் றமிழியம்பி யிசை
கொண்டான்."
(கம்பராமாயணம்-அகத்தியர் படலம்.)

அகத்தியரே பிற்பாடு தமிழ் மொழியை நன்கு ஆராய்ந்து, இலக்கணமும் செய்து வைத் தனர் என்று, "தமிழெனு மளப்பருஞ் சலதி தந் தவன்" எனக் கம்பரும், "அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு" என வில்லிபுத்தூரார் குமாரர் வரந்தருவாரும் கூறியுள்ளார்கள். இக் கூற்றுகளின் உண்மை எவ்வாறாயினும், தமிழ்

மொழி அகத்தியனாருக்கு முன்னரே உண்டான தென்பது பொய்யாகாது. அகத்தியனாரே, தம் இலக்கணத்துள்,

"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின்றுகில் எண்ணெயும் இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின் றெடுப்படும் இலக்கணம்"

என்று சொல்லியுள்ளார்.

அகத்தியனார் இலக்கணம் செய்வதற்கு முன்னரே தமிழ்மொழி உண்டானது என்பது வெள்ளிடைமலை. அதுவுமன்றி அகத்தியர் தமிழை, அவலோகித முனிவரிடமிருந்து கற்றார் என்ற பௌத்தர் கொள்கையும் வலியுறுத்துகிறது.

சங்கம்.

'தலைச் சங்கம்,' 'இடைச்சங்கம்,' 'கடைச் சங்கம்' என மூன்று சங்கங்கள் பாண்டியர்களால் உண்டாக்கப்பட்டன. அவர்களுள், தலைச் சங்கத்திருந்தார் அகத்தியனார், சிவபெருமான், முருகவேள், என இத்தொடக்கத்தார் 549 பேர்களாவர். அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநாரையும், முதுகுருகும், களரியாவிரையுமாகும். அவர்கள், சங்கமிருந்து தமிழாராய்ந்தது மதுரை. இடைச்சங்கத்திருந்தார் அகத்தியனார், தொல்காப்பியனார், சிறுபாண்டரங்கன் என 59 பேர்களாவர். அவர்களாற் பாடப்பட்டன கலியும், குருகும், வெண்டாளியும், வியாமமாலையகவலுமாகும். அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரம். கடைச்சங்கமிருந்தார் சிறுமேதாவியர், சேந்தம்பூதனர், நக்கீரர், என 49 பேர்களாவர். அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை 400, குறுந்தொகை 400, நற்றிணை 400, ஐங்குறு 100, கலி 150, பரிபாடல் 70, கூத்துவரி, பேரிசை, சிற்றிசை என்பனவாகும். அவர் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்தது 1850-ம் ஆண்டென்பர். சங்ககாலத்திற்குப் பின்னரும், தமிழ் மொழியில் இயற்றப்பட்ட நூல்கள் பல. சில ஆங்கில கனவான்கள் தமிழ் மொழியைப்பற்றிக் கூறியிருப்பன வருமாறு.

டாக்டர் கால்ட்வெல் (Caldwell) துரைமகனார் கூறுவது

"Tamil however, the most highly cultivated abintra of all Dravidian idioms, can dispense with its sanskrit altogether if need be and not only stand alone but flourish without its aid."

"வேற்றுச் சார்பின்றி தனித்தியங்கும் தன்மையுடைய, வெகுவாய் ஆக்கஞ் செய்யப் பெற்ற, தமிழ் ஒன்றுமட்டுமே வேண்டுமானாலும், தன்னிடங் கொண்ட வடசொற்களை முற்றும் நீக்கிவிட்டு, தனித்துநின்றியலும் ஆற்றலுடையது நமது தமிழ் மொழி. அது மாத்திரமன்றி, வடமொழியின்றியே மேம்பாடடையத் தக்கதாகவும் இருக்கிறது."

டாக்டர் வின்ஸ்லோவும் (Winslow), "கிறிஸ்து பிறப்பதற்கு 600 அல்லது 700 ஆண்டுகளுக்கு முந்தியே, தமிழுக்குத் தந்தை யென்று சொல்லும் அகத்தியர் தமிழ் நாட்டிற்கு வந்து அதை வளர்த்தார். "தமிழ் முரட்டுப் பாஷை அன்று; அருமையாய்த் தெளிந்த பாஷை" எனக் கூறியுள்ளார். மிஸ்டர் டெயிலர் (Taylor) என்பவரும், "அது நிறைந்து, தெளிந்து, ஒழுங்காயுள்ள பாஷைகளில் மிகவுஞ் சிறந்ததொன்றாகுமென்பதற்கையமில்லை" எனக் கூறியுள்ளார். நம் நாடோ, இவ்வின்பத் தமிழ் பிறந்து வளர்ந்த நாடு. இவ்வின்பத்தை நுகர்ந்த தமிழ்ப்புலவர் பெருமானுகிய சுப்பிரமணிய பாரதியார், "செந்தமிழ் நாடெனும் போதினிலே, இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே," என்று கூறியிருக்கிறார். நம்முன்னோர்கள் வாழ்வே தமிழ் வாழ்வு. அவர்கள் கண்டது தமிழ், கேட்டது தமிழ், உண்டது தமிழ், உயிர்த்தது தமிழ். உற்றது தமிழ்

இந்நாட்டிற் பிறந்து வளர்ந்த நாம், அத்தமிழ் இன்பம் நுகர்கிறோமா? இல்லை என்றே சொல்லவேண்டும். சில மக்கள் தமிழராகப் பிறந்தும், தமிழ் தெரியாமலிருப்பது மேன்மையென்றே எண்ணுகின்றனர். இதுநிற்க, வடமொழி சொற்கள் அதிகம் தமிழ் வழக்கில் வந்துவிட்டன. அதனால் தமிழ்ச் சொல் எவை, வடசொல் எவை என்ற வித்தியாசம் தெரியாமலிடர்படுகின்றனர். இதற்கு, இரு மொழியும் நன்கு கற்ற அறிஞர்கள், இத்தொழிலில் ஈடுபட்டு, வடசொற்களெல்லாவற்றையும் நீக்கி தனித்தமிழிலே பேசவும், எழுதவும் செய்வார்களானால் நமது தாயாகிய தமிழன்னைக்கு ஓர் பெரிய கைம்மாறென்றே சொல்லலாம்.

"வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி,
அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம்
தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப்
பாகரெனில்,
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே
கணித்தறிவார்!"

எனக் காஞ்சிப்புராணத்திலும்,

நான்: என்ன கமலம்! நீ இந்த ஊர் பிறந்தவளோ? நான் இவ்வளவு காலமும் நீ ஊரில் பிறந்து வளர்ந்தவளென்றல்லவா எண்ணியிருந்தேன். இவ்வூரில் பிறந்தவர் அனேகருக்குத் தம் சொந்தப்பாஷை எழுத வாசிக்கத் தெரியாது தான். இருந்தாலும் ஆங்கிலப் பத்திரிகையாவது வாசித்தலாகாதா?

கமலம்: ஆங்கிலமா? அதன் அர்த்தமோ, வாசனையோ, ஒன்றுமே அறியேனே. நான் அவற்றையும் அறிந்திருந்தால் எவ்வளவு நிலைபரத்திலிருந்திருப்பேன். "குதிரையின் குணமறிந்துதான் கடவுள் அதற்குக் கொம்பு கொடுக்கவில்லை" என்று பக்கத்து வீட்டுமொழி சொல்லக் கேட்டிருக்கிறேன். அது என்னிடயத்தில் சரியாகவே இருக்கிறது. ஏதோ கருத்துடன்தான் எம்பெருமான் எனக்கந்தக் கல்வி வாசனையைக் கொடுக்கவில்லை என்றே எண்ணி மனசை ஆற்றிக்கொண்டேன்.

நான்: என்ன கமலம், ஆனால் உனக்கு ஒன்றுமே எழுத வாசிக்கத் தெரியாதென்கிறாயா?" என்று மீண்டும் ஒருமுறை கேட்டேன்.

(இவள் இப்படி சொன்னபோதிலும் என்னால் நம்பிக்கை கொள்ளமுடியவில்லை. இன்னும் நான் கேட்டது உண்மைதானா? என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள விரும்பியவளாய்,)

கமலம்: ஓம், அக்கா! ஏதோ தகப்பனார் இரண்டாம், மூன்றும் வகுப்பு வரையும் படிப்பித்திருந்தும் எல்லாம் மறந்துவிட்டேன். இப்போ ஒன்றும் அறியாதவளாய் இருக்கிறேன் என்று முன்னேயே ஒப்புக்கொண்டேனே. பின்னும் என்னைக் கேலி செய்கிறீர்களே!

நான்: நானோ ஒன்றும் பேசவையறியாதவளாய், வெளி மயக்கைக்கண்டு மயங்கும் என்மந்த புத்தியை விரித்துகொண்டு, இன்னும்அவள் கோபத்தைத் தணிக்க எண்ணி பேச்சைவேறுவிதமாக மாற்றி, கமலா! உனக்குத் தாய்தான் சிறுவயதில் இறந்துவிட்டதாகச் சொல்லியிருக்கிறாய்; உனது தகப்பனாரைப்பற்றி நீ ஒன்றும் சொல்லவில்லையே. உன் தம்பிமார் இப்போ என்ன செய்கிறார்கள்?

கமலா: என் தகப்பனாருக்கு நானும் என் தம்பிமார் இருவருமாக மூன்றுபிள்ளைகளென்று முன்னமே நான் சொல்லியிருக்கிறேன். என் தாயார் நான் அறியாப்பிராயத்திலேயே என்னை விட்டுச் சென்றுவிட்டதினாலல்லவா, சிறு வயதிலேயே குடும்ப பாரத்தை ஏற்று என்தம்பிமாரை வளர்க்கும் கடமையையும் மேற்கொண்டேன்.

நான்: உனக்கு எத்தனை வயசாயிருக்கும். போது உனது தாயார் இறந்தார்கள் உனக்கு ஞாபகமுண்டோ?

கமலா: எனக்கு 5 வயசும், என் தம்பிக்கு இரண்டு வயசும், என் இளையதம்பிக்கு 4 நாட்களுமாயிருக்கும்போதே என் அருமைத்தாயார் எங்கள் பாசத்தையும், இம்மண்ணுலக வாழ்வையும் விட்டு மண்ணோடு மண்ணாய் மறைந்து விட்டார்களாம். எனக்கு அப்போ ஒன்றும் அவ்வளவாகத் தெரியாது. பின் வளர வளர்த்தான், குழந்தைகளாகிய என் தம்பிமாரின் கதியையும், எங்கோமும் தனிமையில் இருந்து பரதேசிபோல் காலங்கழிக்கும் என் தகப்பனாரின் பரிதாபத்தையும் பார்த்து மனங்கலங்கி சித்தப்பிரமை பிடித்தவள்போல், அவர்களைப் பார்ப்பதும், அவர்களைச் சந்தோஷமாய் வைத்திருப்பதுமே எனது கடமையென்னி எனது புலனைச் செலவழித்து வந்தேன். அதனாலல்லவா நானும் படிப்பிலாவது, வாசிப்பிலாவது ஒரு சிந்தனையுமில்லால் இருந்துவிட்டேன். அப்படி நடந்தும் கடைசியில் என்னை பிரயோஜனத்தைக் கண்டேன். (இப்படிச் சொன்னதும் அவள் கண்களிருந்த முத்துபோல் ஜலம் வடிந்தது.)

தொடரும்.

"வாஞ்சிப்பார் வாழாக் கிடப்பின்
வையம் வகைப்படா தொழியும்."

"வன்சொல்."

"இன் சொலால்ன்றி இருநீர் வியனுலகம்
வன் சொலாலென்றும் மகிழ்தே-பொன்செய்
அதிர் வளையாய் பொங்காதழல் கதிரால்
தண்ணென் கதிர் வரவால் பொங்குங் கடல்"

என்பது பண்டை நாள் நம் தமிழகத்திற் திகழ்ந்த அறிஞர் ஒருவரின் கூற்று. இதை அறிந்திருப்பவர் பலரேயாயினும் உண்மையில அதை அனுஷ்டித்து நடப்பவர் மிகச் சிலரேயாகும். இதைப் பற்றி மற்றவர்களுக்கு போதிப்பவர் கூடச் சில சமயம் தாம் நடக்கத் தவறிவிடுவதுமுண்டு.

வன் சொல்லானது முற் கோபத்தினால் சொல்லும் கடுஞ் சொல்லே. அந்தக் கோபத்தைக் குறைக்கப் பழகி விடுவோமேயனால் எப்படி நெருப்பு நூர்ந்தவுடன் அதன் சூடு அடங்கி விடுகிறதோ, அதேபோல் கோபம் அடங்கினவுடன் அந்த வன்சொல்லும் தானே நம்மைவிட்டு விலகிக்கொள்ளும். கோபமானது பஞ்சமாபாதகத்துள் ஒன்றாகிய கொலை பாதகத்துக்கும் ஏதுவாயுள்ளது.

பாம்பு, தேள் முதலிய விஷ சந்துக்கள் தீண்டினால் நமக்கு எவ்வளவு உபத்திரவம் உண்டாகின்றதோ அதைவிடப் பன்மடங்கு வேதனையை முற்கோபிகள் பின்னால் அனுபவிக்கின்றனர். அந்தக் கோபமே பாவங்களுக்கெல்லாம் தாய் தந்தை என்று ஆன்றோர் சொல்லியிருக்கின்றனர்.

"கோபத்தால் கௌசிகன் தவத்தைக் கொட்டினன்
கோபத்தா னகுடனுங் கோல மாறினன்
கோபத்தா லிந்திரன் குலீசம் போக்கினன்,
கோபத்தாலிறந்தவர் கோடி கோடியே"

இப்படியே கோபத்தினால் வரும் வன் சொல்லினால், கோடானு கோடி மக்கள் உயிரிழந்தனர்; பதவியிழந்தனர்; நீதிஸ்தலங்களுக்கு வழக்கு உரைக்கச் சென்று பெருந்தொகையான பணத்தையெல்லாம் இழக்கின்றனர். இன்னும் என்னென்ன ஒருவருக்குரியதோ அவற்றையெல்லாம் இழக்கும்படி செய்ய, அந்த வன்சொல்லுக்கு வல்லமையுண்டு. ஒரு பணம் அதாவது ஆறு சதத்தினால் கொலை நடந்ததென்று நாங்கள் பத்திரிகையில் படித்திருக்கிறோமல்லவா? அது எதனாலென நீங்கள் நினைக்கிறீர்கள்? அந்த வன்சொல்லென்னும் கொடிய ராக்ஷசனாலேயே. இல்லாவிடில் அந்த ஆறு சதம் அப்படிப் பெரிதல்ல. எத்தனையோ பேர் ஆயிரமாயிரமாகக் கடன் வாங்கிக்கொண்டும் தங்களுடைய சுதந்திரமான பேச்சினால் தப்பி வாழ்கின்றனர். இன் சொல்லுக்கு இலகாதது ஒன்றுமில்லை. இந்த ஆறு சதம் ஒரு அற்பமான தொகை. இதைக் கடன் கொடுத்தவன் கேட்டானும். ஆறு சதமும் ஒரு பெரிய காசென்று கேட்க வந்துவிட்டாயா? என்றான் கடன் வாங்கியவன். அம்மே! நீ வெட்கமில்லாமல்தானே ஆறு சதம் என்னிடத்தில் கடன் வாங்கினாய் என்றான் கடன் கொடுத்தவன். இப்படியே இவ்வாக்குவாதம் பெரிதாக சண்டையாய், அடிபிடியாய், ஈற்றில் அந்தோ! கொலைபாதகமாய் முடிந்ததே.

திருவள்ளுவ நாயனாரும் கோபத்தைப்பற்றிச் சொல்லியவிடத்து, "தீயினால் சுட்ட புண் உள்ளாறு மாறுதே நாவினால் சுட்ட வடு," என்று கோபத்தின் இழிவைக் கூறிப்பேசினார். இன்னும் வீட்டில் புருஷன் மனைவிக்குள்ளும் இந்த வன் சொல்லென்னும் கொடிய பேயானது இருந்து கொண்டு, எத்தனை கல்யாணப்பிரிவுகளையும், சந்நியாச கோலங்களையும், கொலைகளையுங் கூடச் செய்து வேடிக்கை பார்க்கிறது. அந்தப்பேயை கிட்டவரவொட்டாமல் தடுத்து வந்தோமானால், உலகில் யாவராலும் நல்லவர் என்று கேட்பதற்கு தடையேதும் உளதோ? யாகாவாராயினும் நாகாக்க, காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு' என்பதும் தமிழ் வேதமாகிய குறள் வெண்பா பெண்களாகிய நாங்களாவது அந்தப் பேய்க்கு அடிமையாகாமல் நம்மையும், நம் குழந்தைகளையும் காத்து வருவோமானால் மற்றவர்களும் நம்மைப்பார்த்து சீகிரம் திருந்திவிடுவார்கள். இரண்டு தரம் ஏசினாலும் வாயை மூடிக்கொண்டு இருந்து விடுவோமாகில் அவர்களும் வெட்கினவர்களாய், நம்மை ஏசுவதை அவ்வளவில் நிறுத்திவிடுவார்கள். வாயை மூடிக்கொண்டிருக்க வேண்டுமென்றும், முன்னொருநாள் நான் கேள்விப்பட்ட சங்கதி ஒன்று நினைவுக்கு வருகிறது. ஒரு ஊரில் ஒரு கிழவியிருந்தாள். அவள் எல்லா வியாதிகளையும் நிவர்த்திக்கும் கெட்டித்தனம் வாய்ந்தவளாம். அவளை பில்லி சூனியக் காரியென்றும் பலபேர் பலவிதமாய்ப் பேசி வந்தார்கள். அவள் அது ஒன்றையும் சட்டை பண்ணுதே யாவரையும் சமமாக நடத்தி அன்போடு காப்பாற்றிக் கொண்டு வந்தாள். அந்தக் கிராமத்தில் புருஷன் ஆக்கினைக்குட்பட்ட பெண்ணொருத்தி இதைக்கேள்வியுற்றுத் தன் மனவருத்தத்தைத் தீர்க்கும் பொருட்டு அந்தக் கிழவியிடம் வந்து, 'அம்மா, தாயே! நான் ஒரு துக்கத்திலாழ்ந்து விடுபட வகையறியாது தவிக்கிறேன். எனக்கோ என் புருஷனிடப் போக்கிடம் இல்லை. அவனோ மகா துஷ்டன், பொல்லாதவன், மூர்க்கன். அவன் மனுஷ வடிவெடுத்த விலங்கென்று சொல்லுதல் சிறிதும் மிகையாது. பிரதி தினமும் கைவலிக்க

என்னை அடிக்கிறான், வைகிறான், குடித்து வந்து சட்டிபானைகளையெல்லாம் காலாலுதைத்து பொடி பொடியாக்குகிறான். எனக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. அவனை வசியப்படுத்த மருந்து இருந்தால் கொடுங்கள், அம்மா! என்றிருந்தாள். இல்லாவிடில் என் பிராணனை விட்டு விடுவதைத் தவிர வேறொரு வழியுமில்லை என்று சொல்லி அழுதாள். அதுகேட்ட கிழவி அதிக களியோடு அவளைப்பார்த்து 'மகளே அழாதே; அவனுமொரு விதமான வியாதிதான்; அதற்கு நல்ல மருந்து நான் கொடுக்கிறேன். சற்றுப் பொறு; மருந்துக்கு வேண்டிய சாமான்களெல்லாம் தயாராக்கி வருகிறேன்' என்று சொல்லி ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் தண்ணீர் கொண்டு, அதில்கொஞ்சம்விபூதிபோட்டு, அத்துடன் கொஞ்சம் மிளகு, சீரகம் பொடியும்போட்டு ஏதோ மந்திரம் ஜெபித்து, அத்தத் தண்ணீரை ஒரு போத்தலில் நிரப்பி பத்திரமாய் மூடி அப்பெண்ணையில் கொடுத்து, "மகளே! இதுமிகவும் அருமையான மருந்து; பத்திய முறையைக் கவனமாகக் கேட்டு அதன்படி செய். அதாவது சாயந்தரம் உன் புருஷன் வீட்டுக்கு வருவது கண்டவுடன், ஓடிப்போய் இந்த மருந்தில் ஒருவாய் ஊறுஞ்சி அதை உட்கொள்ளாமலும் துப்பிவிடாமலும் வாயில் வைத்துக்கொண்டேயிரு. அவனென்ன சொன்னாலும் உன் வாயிலிருக்கும் மருந்தை மட்டும் துப்பிவிடாதே. அப்படி உன்வாயுழைந்து துப்பிவிட்ட நேரம் உன் புருஷனுக்கெதிரில் போகாதே. உன் புருஷனுக்கெதிரில்போகும்நேரமெல்லாம் இந்த மருந்து உன் வாயிலிருக்கட்டும். மறந்து விடாதே. உன் புருஷன் சாப்பிட்டுப் படுக்கைக்குப் போனபின் தான் நீ இந்த மருந்தை துப்பிவிட்டுச் சாப்பிட்டுப் படுக்கப்போகலாம்.. இப்படியே ஒரு மாசத்திற்கு பாவித்து வருவாயானால் உன்புருஷன் துஷ்டகுணமெல்லாம் மாறிச் சாதுவாகி விடுவான்" என்றார். அப்பெண்மணியும் அக்கிழவியின் சொற்கேட்டு மிகுந்த சந்தோஷத்துடன் வீடுபோய், கிழவிசொன்ன பத்தியம் தவறாது நடக்கலானாள். ஒவ்வொரு நாளும் அவன் ஏசும் நேரமெல்லாம் இவள் வாயில் மருந்திருப்பதினால் உள்ளம் கோபத்தால் பொங்கின போதிலும் வாயைத் திறவாமல் தலையைமட்டும் அசைத்து விட்டுப் பேசாமலிருப்பாள். "என்னடி சும்மா விருக்கிறாய்; தணணீர் கொண்டுவா" என்பான். என்ன செய்வாள் பாவம்! வாயில் மருந்திருப்பதினால் ஒன்றும் பேசாது கொண்டுவந்து கொடுப்பாள். இப்படியே இரண்டு நாள் பார்த்தி அவள் புருஷன், "இதென்ன ஆச்சரியம் நான் ஒன்றுசொல்வதற்குள் பத்துச்சொல்லி முடித்து விடும் எனது மனைவி இப்படி ஒன்றும் பேசாமல் திரிகிறாளே" என்று வியப்புற்றவனைப் அவளை அவ்வளவாக ஒன்றும் பேசாமல் விட்டுவந்தான். இதைப்பார்த்த அப்பெண்ணும் ஏதோ இம்மருந்தின் மகிமையினால்தான் என்புருஷன் திருந்தி வருகிறானென்றெண்ணி ஆனந்தமடைந்தாள். இப்படியே நாள்செல்லச் செல்ல இவளும் மருந்தை வாயில் வைத்துக்கொண்டு எல்லாம் சரிவர நடத்தி வருவதினால் அவனும் தன் மனைவியை அன்பாக நடத்தி வரலானான். மருந்து முடிந்தவுடன் அப்பெண் மறுபடியும் கிழவியிடம் போய் "அம்மா! உன்மருந்து உண்மையில் நல்லபலன் அளித்திருக்கிறது. இன்னும் கொஞ்ச மருந்து கொடுங்களென்று கேட்டாள். அது கேட்ட கிழவி மிகவும் சந்தோஷமுற்று, "மகளே! நீ பத்தியம் தவறாது நான்கொடுத்த மருந்தை பாவித்து வந்ததற்கு மிகவும் சந்தோஷம். ஆனால் அந்த மருந்து வெறும் தண்ணீர்தான். நானும் சூனியக்காரியல்ல! 'எல்லாரும் இன்புற்றிருக்க வெண்ணுவதே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே' என்ற வாக்குப்படி, மற்றவர்கள் நல்லாயிருக்க வேண்டுமென்பதே என் ஆவல். புருஷன் வேங்கையானாலும் அவனுடன் எதிர்த்து வார்த்தையாடாமலும், அடக்கமாகவுமிருந்தால் அவன் நாளடைவில் திருந்திவிடுவான். நீ வாயில் தண்ணீர் வைத்துக்கொண்டிருந்தபடியால் அவனுக்கு எதிர்வார்த்தை பேச்முடியவில்லை; அவனும் சாதுவானான். இப்படியே நடந்துவருவதைவிட்டு மருந்தும் வேறு வேண்டுமா," என்று புத்தி சொல்லியனுப்பினாள்.

அப்பெண்ணின் புருஷன் மூர்க்கன் என்று சொன்னது எதனால்? இவளின் வன்சொல்லினால்லவா புருஷனும் மூர்க்கனான? ஆதலால் சகோதரிகளே! வன்சொல் இத்தனை கெடுதிகளை வரப்பண்ணுகிறதே! நாம் வன்சொல்லை அறவே நீக்குவோமானால் எல்லாம் மங்களகரமாக நடக்கும். கற்புடைய மங்கையர் எக்காலத்திலும் உரத்த சத்தமாய் பேசாமல் குயில்போல இனிய குரலால் வசனிக்க வேண்டும். ஏனெனில் குயில் யாவராலும் விரும்பிடுவதற்கு காரணம் அதன் இனிமையான குரலே. கழுதை தன் வன்குரலாலன்றோ யாவராலும் வெறுக்கப்படுகின்றது. இப்படியே இன்சொல் வளங்குபவர், யாவராலும் விரும்பப்படுவரென்பதும், வன்சொல்லுடையார் எல்லோராலும் வெறுக்கப்படுவரென்பதும் மேற்கூறிய எடுத்துக்காட்டினால் பெறப்படுகின்றது.